# கம்பெனியின் கல்விப் புரட்சி

## 1. நவீனமயமாதல்

அறிவையும், அறிவியலையும் அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுவதே தற்கால சமுதாயமாகும் (Modern Society). அறிவு சார்ந்த கல்வியே தற்கால **சமுதாய**த்தின் திறவுகோல்.) இத்தகைய நவீன கல்வியே மனிதனிடம் மறைந்து கிடக்கும் ஆற்றலை வெளிக்கொண்டு வருதல்; சமூக மாற்றத்தை ஏற்படுத்துவது; பொருளாதார உற்பத்தித் திறனைப் பெருக்குவது; சமனற்ற சம்பிரதாயப் பிற்போக்குக் கல்வி முறைக்கு மாற்று வழியைக் கண்டுபிடிப்பது; தடையற்ற அறிவு விரிவாக்கம்; முற்போக்கு மனப்பான்மை; வாழ்க்கை உயர்வுக்குத் தேவையான திறமைகள்; சமுதாயப் பொறுப்பு; தாராள சிந்தனை; சமயம் சாரா நடுநிலைப் போக்கு; பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் திறன் போன்றவை **தற்காலமாதலின் அல்லது நவீனமாதலின் அடையாளங்கள்** ஆகும். பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி பாரம்பரிய கல்வி முறையில் அடிப்படை மாற்றங்களைச் செய்து தமிழ் நாட்டில் கல்விப் புரட்சியைச் செய்தது.

## 2. தமிழ் நாட்டுக் கல்வி முறை

தமிழ் நாட்டில் சங்க காலக் கல்வி முறை சமுதாய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட சமயம் சாராக் கல்வி முறையாகும். 'உற்றுழி உதவியும், 'உறுபொருள் கொடுத்தும்' அனைத்துப் பிரிவினரும் சமச்சீர் கல்வி பெறுவதற்கு ஊக்குவிக்கப் பட்டனர். இப்பகுத்தறிவு சார்ந்த கல்வி முறை களப்பிரர் காலத்தில் சமயச் **சூறாவளியி**ல் அடித்துச் செல்லப்பட்டது. பல்லவர் ஆட்சிக் காலத்தில் தமிழ் மொழிக் கல்வி மீட்கப்பட்டாலும், பாலியும், பிராகிருதமும், சம கிருதமும் மேலோங்கி அதன் சமுதாயப் பொதுமையை தலைதூக்க முடியாமல் செய்துவிட்டது. சோழர்களின் ஆட்சிக் காலத்தில் போர்களுக்கும், கோயில்கள் கட்டுவதற்கும், வணிக விரிவாக்கத்துக்கும் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் வாழ்க்கைக் கல்விக்குக் கொடுக்கப்படவில்லை. சம கிருதத்தின் செல்வாக்கு அதிகரித்தது. வேதங்களுக்கும், தர்ம சா திரங்களுக்கும், புராணங்களுக்கும் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. முகமதியர் படையெடுப்புக்குப் பின் தமிழ் நாட்டை ஆட்சி செய்த நாயக்கர்கள், நவாபுகள், மராத்தியர் காலங்களில் சமச்சீரற்றக் கல்வி

முறையே நீடித்தது. ஆங்கிலேயர் வருகைக்குப் பின்னர் தமிழ் நாட்டுக் **கல்வி முறை நவீனமயமாத**லை நோக்கிப் பயணிக்கத் துவங்கியது.

## 3. ஆங்கில ஆதரவாளர்கள்

பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவுடன் வர்த்தகம் செய்வதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பாகும். அக்கம்பெனி துவக்கத்தில் வர்த்தக விரிவாக்கத்தில் மட்டுமே கவனம் செலுத்திப் பின்னர் மக்களை ஆட்சி செய்யும் நிர்வாக இயந்திரமாக உருமாற்றமடைந்தது! இதற்கிடையே வாரன் ஹேடிங் , வில்லியம் ஜோன் , **ஜோனத்தா**ன் டன்கன், வெல்லெலி பிரபு, சார்லஸ் கிராண்ட், டேவிட் ஹேர், தாமஸ் மன்றோ போன்றோர் மக்களுக்கு முறையான, தரமான, வாழ்க்கைக்குத் **தேவையான கல்வி முறையை உருவாக்கு**வதில் முனைப்புடன் ஈடுபட்டனர். இவர்களுள் சென்னை ஆளுநராக இருந்த (1820-1827) தாமஸ் மன்றோ தமிழ் நாட்டு மக்களுக்கு ஆற்றிய கல்வித் தொண்டு பாராட்டுக்குரியது; **நினைவு கூறத்தக்கது.**

## 4. அரசாங்க ஆதரவு

### 4.1 பட்டயம், 1813

19 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் வெளியிட்ட ஒரு பட்டயத்தை (The Charter of the East India Company, 1813) வெளியிட்டது. 1813 பட்டயச் சட்டம் ஒரு வரலாற்று முக்கியத்துவமிக்க அடிப்படை ஆவணமாகும். அந்த

ஆவணத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் பின்வரும் முடிவுகளை அறிவித்தது: 1) பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய மக்களின் கல்விக்காக ஆண்டுதோறும் ஒரு இலட்சம் **ரூபாயை ஒதுக்க** வேண்டும்; 2) இத்தொகையைக் கம்பெனியின் நில வருவாய் உபரிப் பணத்திலிருந்து செலவிட வேண்டும்; 3) அரசாங்கம் செலவிடும் பணம் இந்திய இலக்கியங்களை மீட்கவும், கல்வி அறிவைப் பெருக்கவும் பயன்படுத்தப்பட வேண்டும்; 4) கம்பெனியின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் மக்கள் அனைவருக்கும் அறிவியல் அறிவை அறிமுகப்படுத்த வேண்டும்; 5) கல்வி அறிவுள்ள சுதேசிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்; 6) 1813 பட்டயம் 20 ஆண்டுகளுக்கு ஒரு முறை பரிசீலிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட வேண்டும். சுருங்கக் கூறின், இப்பட்டயம் கல்வி வளர்ச்சிக்கான அரசாங்கப் பொறுப்பு, மானியத் தொகை, கல்வியின் நோக்கம், கல்வித் திட்டம் போன்றவற்றை சந்தேகத்துக்கு இடமின்றித் தெளிவுபடுத்தியது. 1813 பட்டயத்தின்

அடிப்படையில் தமிழ் நாட்டுக் கல்வி முறை வகுக்கப்பட்டு, பின்பற்றப்பட்டது. இப்பட்டயத்தின் அடிப்படையிலேயே தாமஸ் மன்றோ தனது கல்விக் கொள்கையை வகுத்தார். மன்றோவின் பரிந்துரைப்படி 1822 இல் பொதுக் கல்வி போர்டு (Board of Public Instruction) உருவாக்கப்பட்டது. தாய் மொழிக் கல்விப் பள்ளிகள் துவக்கப்பட்டன. 1827 இல் சென்னையில் மருத்துவப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது.

## 4.2 புதிய பரிசோதனை , 1833

1833 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் (1813) புதுப்பிக்கப்பட்டது. அதன்பின் பல அமெரிக்க, ஜெர்மானிய சமயப்பரப்பூழியர்களும், சங்கங்களும் இந்தியாவுக்கு வந்தனர். இக்காலகட்டத்தில் அலெக்சாண்டர் டப் (Alexander Duff) என்ற ஒரு சமயப் பரப்பாளர் ஒரு கருத்தைக் கூறினார். அதாவது, அனைவருக்கும் கிறித்துவக் கல்வி அளிப்பது இயலாத காரியம். எனவே, மேல்தட்டு மக்களுக்கு மேலைநாட்டுக் கல்வியைக் கொடுத்தால் அவர்கள் மூலம் கல்வியின் பயன் கீழ்த்தட்டு மக்களைச் சென்றடையும். இது கீழ்நோக்கிப் பரவும் கோட்பாடு (Dowanward Filtration Theory) என்று அழைக்கப்பட்டது. இப்புதிய கோட்பாட்டின்படி திருநெல்வேலியில் மட்டும்107 பள்ளிகள் துவக்கப்பட்டன; இவற்றில் 2,**882 மாணவர்கள் சேர்ந்தனர். இங்கிலாந்தின்** சமயப் பரப்பு சங்கம் (Religious Teaching Society of England) சார்பாக கௌ (Gough) **என்பவர் சென்னையில் பள்ளிகளைத்** துவங்கினார். அதேபோன்று ஆன்டர்சனும் பிரைட்வுட்டும் (Anderson and Braidwood) சென்னையில் துவங்கிய பள்ளியே பின்னர் சென்னை கிறித்துவக் கல்லூரி (Madras Christian College)யாக விரிவடைந்தது. சேலம், கோவை, கடப்பா, பெல்லாரி போன்ற நகர்களிலும் இதுபோன்ற பள்ளிகள் துவக்கப்பட்டன. இப்பள்ளிகள் அனைத்தும் அரசாங்க ஆதரவின்றி துவக்கப்பட்டவை யாகும். 1830-க்கும் 1875-க்கும் இடைப்பட்ட காலத்தை சமயப் பரப்புப் பள்ளி காலம் **(Age of Mission School) என்று அழைக்கலாம் என்று கூறுகிறார் கல்வி ஆராய்ச்சியாளர் பத்மா ராமச்சந்திரன்.**

## 4.3 மெக்காலே தீர்வு, 1835

## மூன்று கருத்துக்கள்

கம்பெனி கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்கும் தொகையை எவ்வாறு செலவு செய்வது என்பது பற்றி அதிகாரிகள் மற்றும் கல்வி ஆர்வலர்களுக்கிடையே ஒருமித்த **கருத்து உருவாகவில்லை**.

அவர்களிடையே மூன்று வேறுபட்ட கருத்துக்கள் நிலவின: 1) சம கிருதம், அராபிய, பாரசீய மொழிகளில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும்; 2) மேற்கத்திய அறிவியல் கல்வியை ஆங்கில வழி கற்பிக்க வேண்டும்; 3) நவீன கல்வியைத் தாய்மொழி மூலம் கற்பிக்க வேண்டும். இந்த சர்ச்சைக்குத் தீர்வு காண்பதற்காக தாம பாபிங்டன் மெக்காலே (Thom**as Babington Macaulay)** கேட்டுக் கொள்ளப்பட்டார்.

## மெக்காலே தீர்வு

மெக்காலே கவர்னர் ஜெனரல் அவையில் சட்ட உறுப்பினராகவும், பொதுக் கல்விக் குழுவின் தலைவராகவும் இருந்தார். அக்கால அறிவு மேதைகளில் அவர் ஒருவராகத் திகழ்ந்தார். மெக்காலேயின் வரலாற்றுச் சிறப்புமிக்க கல்விக் குறிப்பில் (Macaulay's Minute, 1835) கல்விப் பயிற்சி மொழி பற்றிய சர்ச்சைக்கு ஒரு தீர்வைக் கொடுத்தார். மேற்கத்திய அறிவியல் கல்வியைக் கொடுப்பதற்கேற்ப இந்திய மொழி எதுவும் வளர்ச்சியடையவில்லை என்பதால் நவீன கல்வியை ஆங்கில வழி சொல்வதே சிறந்தது என்பதே மெக்காலேயின் தீர்வாகும்.

### முக்கிய முடிவு

மெக்காலேயின் பரிந்துரையை ஏற்றுக் கொண்ட கவர்னர் ஜெனரல் பெண்டிங் பிரபு (Lord Bentinck) பின்வரும் முக்கிய முடிவை அறிவித்தார்: 1) தாய் மொழியில் கற்பிக்கும் கல்விக் கூடங்கள் வழக்கம் போல் செயல்படலாம்; 2) பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நோக்கம் மக்களுக்கு அறிவியல் மற்றும் இலக்கியக் கல்வியை ஆங்கிலத்தின் மூலம் **கொடுப்பதேயாகும்; 3) அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் கல்வி நிதி ஆங்கிலக் கல்விக்கு** மட்டுமே செலவிடப்பட வேண்டும். சென்னையில் 1835 இல் மருத்துவக் கல்லூரியும், 1841 ஆம் ஆண்டு 67 மாணவர்களுடன் மாநிலக் கல்லூரி (Presidency College)யும் துவக்கப்பட்டன.

## 4.4 தாம்சான் திட்டம், 1848

## பெண் கல்வி

ஜேம்ஸ் தாம்சான் வடமேற்கு மாகாணங்களின் துணை **ஆளுநராக** (Lieutenant Governor of North-Western Provinces) 10 **ஆண்டுகள்** (1843-1**853) பணியாற்றி**யவர். கல்வி நிபுணர். இவர் தயாரித்த கல்வித் திட்டத்தில் பெண் கல்விக்குப் பிரதான இடத்தைக் கொடுத்தார். இந்தியரின்

திறமைகளை வெகுவாக ஊக்குவிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்ற **இலக்கோடு கவர்னர் ஜெனரலாகப் பொறுப்பேற்ற டல்ஹௌசி பிரபு (Lord Dalhousie)** தாம்சான் கல்வித் திட்டத்துக்கு முழு ஆதரவையும் அளித்தார். அதுமட்டுமல்ல. **கவர்னர் ஜெனரல் அவையின் உறுப்பினரும், கல்விக் குழுவின் தலைவருமான பெத்யூன்** (Bethuine) பெண் கல்விக்கு சிறப்பிடம் கொடுத்து விரிவுபடுத்துவதில் ஊக்கத்துடன் செயல்பட்டார். பெண்களைப் படிக்க வைத்தால் **திருமணமானவுடன் விதவைகளாகி விடுவர் என்ற மூட நம்பிக்கையுடைய வங்காளத்**தில் பெத்யூன் ஒரு பெண்கள் பள்ளியைத் துவக்கினார்! இப்புரட்சிகரமான முயற்சியை **முன்மாதிரியாகக் கொ**ண்டு சென்னை ஆளுநராக இருந்த தாம மன்றோ பெண் **கல்விக்கு சாதகமான கல்விக் கொள்கையை வகுத்தா**ர். இக்கொள்கை சமுதாயத் தீமைகளிலிருந்து பெண்களை விடுவிக்க பெண் கல்வி இன்றியமையாதது என்ற மன்றோவின் லட்சியத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. மன்றோவின் பெண் கல்விக் கொள்கை, தற்காலத் தமிழ் நாட்டு கல்வி **வளர்ச்சி வரலாற்றில் முற்போக்கு நடவடிக்கையாகும்.**

## தொழில் கல்வி

தாம்சான் கல்வித் திட்டத்தின் மற்றொரு முக்கியக்கூறு தொழில் கல்வி (Technical Education) ஆகும். இந்தியாவில் பாதைகளும், பாலங்களும், ஆறுகளும் பிற உள்கட்டுமான வசதிகளும் பெருக வேண்டுமாயின் சிவில் பொறியாளர்களும் (Civil Engineers) பிற கீழ்நிலை தொழில்நுட்ப அலுவலர்களும் ஆயிரக்கணக்கில் தேவைப்படுவர் என்பதை நன்கறிந்த தாம்சான் ரூர்கியில் (Roorkee) ஒரு சிவில் பொறியியல் கல்லூரியைத் துவக்கினார். அவரது இம்முயற்சிக்கும் கவர்னர் ஜெனரல் டல்ஹௌசி பிரபு முழு ஆதரவையும் நல்கினார். தாம்சானின் தொழில் நுட்பக் கல்வித் திட்டத்தை முன்மாதிரியாகக் கொண்டு மேஜர் மெயிட்லாந்து (Major Maitland) **சென்னையில்** ஒரு தொழில் நுட்பப் பள்ளியைத் துவக்கினார். அப்பள்ளி மாபெரும் வெற்றி யடைந்தது. சென்னைத் தொழில்நுட்பப் பள்ளியை முன்மாதிரியாகக் கொண்டு டல்ஹௌசி பிரபு வங்காளத்தில் பல தொழில்நுட்பப் பள்ளிகளைத் துவக்கத் திட்டமிட்டார்!

## 4.5 ஸ்டான்லியின் கல்விக் குறிப்பு, 1850

## துவக்கக் கல்வி

அரசாங்கத் திட்டங்களால் அடித்தட்டு மக்களுக்கு கல்வியின் பயன் **சென்றடையவில்லை என்பது தெரிய வந்தது. எனவே, அவர்களுக்குத் துவக்கக் கல்வியும்,** வாழ்க்கைக்குத் தேவையான தொழில் கல்வியும் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை அரசாங்கம் உணர்ந்தது. துவக்கப் பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், தொழில் கல்வி நிறுவனங்களைத் துவக்குவதற்குமான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எனினும், கம்பெனி அதிகாரிகள் துவக்கப் பள்ளிகளுக்குத் தொடர்ந்து முன்னுரிமை அளிக்காமல் உயர்நிலைக் கல்வியை ஊக்குவித்தனர்! அதன் விளைவாக துவக்கக் கல்வி துவண்டு போயிற்று!

**இக்குறையைக் களைவதற்காக** 1850 ஆம் ஆண்டு ஸ்டான்லி பிரபு (Lord **Stanley) ஒரு கல்விக் குறிப்பை (Stanle**y's Despatch)த் தயார் செய்தார். இக்குறிப்பில் கம்பெனியின் அரசாங்கமே துவக்கக் கல்விக்கான பொறுப்பை எடுத்துக் **கொள்ள வேண்டும் என்று பரிந்து**ரைக்கப்பட்டது. இதற்கான செலவை சரிக்கட்ட **அரசாங்கம் தல வரிகளை (Local Taxes**) விதிக்கலாம் என்ற ஆலோசனை கூறப்பட்டது. அதன்பின் துவக்கக் கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. 1882 இல் அமைக்கப்பட்ட இந்தியக் கல்விக் குழு (Indian Education Commission) துவக்கக் கல்விக்கான பொறுப்பை உள்ளாட்சி நிறுவனங்களிடம் ஒப்படைத்தது குறிப்பிடத்தக்கது.

## 4.6 உட்டின் கல்வித் திட்டம், 1854

## சிறப்பு அம்சங்கள்

சார்லஸ் உட் (Sir Charles Wood) கட்டுப்பாட்டுக் குழு (Board of Control)வின் தலைவராக இருந்தார். கவர்னர் ஜெனரல் டல்ஹௌசி பிரபுவின் வேண்டுகோளுக்கு இணங்கி சார்ல உட் ஒரு அகல் விரிவான கல்வித் திட்டத்தைத் தயாரித்தார் (Wood's Despatch, 1854). உட் திட்டத்தின் சிறப்புக் கூறுகளாவன: 1) தாய்மொழி வழி கற்பிக்கும் கல்விக் கூடங்கள் தொடர்ந்து செயல்படலாம்; அவை வாழ்க்கைக்குப் பயன்படக் கூடியவாறு செயல்பட வேண்டும்; 2) அரசாங்க ஆதரவு பெறும் கல்வி நிறுவனங்களில் அறிவியல்கள், ஐரோப்பிய இலக்கியம், கலைப்பாடங்கள் கற்பிக்கப் படுதல் வேண்டும்; 3) இக்கல்வித் திட்டத்தை நிறைவேற்ற ஒவ்வொரு ராஜதானியிலும் ஒரு பொது கல்வித் துறை (Department of Public Instruction)

துவக்கப்பட வேண்டும்; 4) கல்விக்காக ஒதுக்கப்படும் தொகை துவக்கக் கல்விக்காக செலவிடப்பட வேண்டும்; 5) கல்வியின் பயன் அடித்தட்டு மக்களை சென்றடைய வேண்டும் என்பதற்காக தனியார் பள்ளிகளுக்கும் கல்வி மானியம் (Grant-in-Aid) வழங்க வேண்டும்; 6) அதேபோன்று, சமயச் சார்பற்ற கல்வி (Secular Education) அளிக்கும் பள்ளிகளுக்கும் மானியம் வழங்கலாம்; 7) ஆசிரியர்களுக்கு உரிய பயிற்சி அளிக்க வேண்டும்; 8) தரமான பாடப் புத்தகங்கள் வெளியிடப்பட வேண்டும்; 9) பெண் கல்வி வளர்ச்சிக்கு அரசாங்கம் **வெளிப்படையான இதயபூர்வமா**ன ' ஆதரவை அளிக்கும்; 10) லண்டன் பல்கலைக் **கழகத்தை முன் மாதிரியாகக் கொண்டு சென்னை, கல்கத்தா, பம்பாய் ஆகிய நகரங்களில் தலா ஒரு பல்கலைக் கழகம் து**வக்கப்பட வேண்டும்.

## பொதுக் கல்வித் துறை

உட்டின் கல்வித் திட்டத்தின் கீழ் சென்னையில் ஒரு பொதுக் கல்வித் துறை துவக்கப்பட்டது (1855). இத்துறைக்கு ஒரு முறையான நிர்வாகத் தலைமை இயக்குநர் (Director) நியமிக்கப்பட்டார். இவருக்கு உதவியாக பல ஆய்வாளர்கள் (In**spectors)** நியமிக்கப்பட்டனர். இவர்கள் பள்ளிகளுக்குச் சென்று, அவை **எவ்வாறு செயல்படுகின்றன** என்பதைக் கண்டறிந்து கல்வித் துறை இயக்குநருக்கு ஆண்டு அறிக்கை அளித்தனர். 1856 இல் சென்னை சைதாப்பேட்டையில் அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி துவக்கப் பட்டது.

1857 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 ஆம் தேதி சென்னை பல்கலைக் கழகம் (University of Madras) துவக்கப்பட்டது. இதோடு கல்லூரிகள் இணைக்கப்பட்டன. ஆரம்பத்தில் சென்னை பல்கலைக் கழகம் கல்லூரிகளுக்குத் தேர்வு நடத்திப் பட்டம் வழங்கும் அமைப்பாக மட்டுமே இருந்தது. பட்டப் படிப்புக்கான பாடங்கள் கல்லூரிகளில் மட்டுமே கற்பிக்கப்பட்டன. சென்னைப் பல்கலைக் கழகம் லண்டன் பல்கலைக் கழகத்தை முன்மாதிரியாகக் கொண்டு துவக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. சி.டபிள்யு. தாமோதரம் பிள்ளையும், கரோல்.வி.வி வநாத பிள்ளையும் இப்பல்கலைக் கழகத்தின் முதல் பட்டதாரிகள் ஆவர். சர்.எ .சுப்ரமணிய ஐயர் இப்பல்கலைக் கழகத்தின் முதல் துணை வேந்தர்.

## 5. கல்விச் சீர்திருத்தம்

### 5.1. தாமஸ் மன்றோ -

தாம மன்றோ, தமிழ் நாட்டில் கல்விச் சீர்திருத்தம் செய்வதற்கு முன்னால் சென்னை ராஜதானியில் நடைமுறையில் இருந்த கல்வி முறை பற்றிய ஒரு ஆய்வை (Survey) மேற்கொண்டார் (1822). மாவட்ட ஆட்சியாளர்களைக் கொண்டு திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஆய்வறிக்கை பின்வரும் கல்வி நிலைப்பாட்டைக் காட்டியது: 1) தமிழ் நாட்டின் பல மாவட்டங்களில் பள்ளிகள் செயல்பட்டுக் கொண்டிருந்தன; 2) இப்பள்ளிகளின் பயனைப் பிராமணர்களும், பிற உயர் சாதி மக்கள் மட்டுமே பெற்று வந்தனர்; 3) தாழ்த்தப்பட்ட மக்களும், பிற பிற்படுத்தப்பட்டோருக்கும் கல்வி மறுக்கப்பட்டது; 4) அரசாங்கத்துக்கும் கல்வி வளர்ச்சிக்கும் தொடர்பில்லாமல் இருந்தது; 5) அளிக்கப்பட்ட கல்வியும் ஒரு சீராக இல்லை ; 6) 12,850,941 மக்கள் தொகை கொண்ட சென்னை ராஜதானியில் 12,498 பள்ளிகள் மட்டுமே இருந்தன! தமிழ் நாட்டில் முதல் முறையாக அறிவியல் ரீதியாக மேற்கொள்ளப்பட்ட கல்வி ஆய்வு இதுவேயாகும்.

## 5.2 மன்றோவின் கல்விக் கொள்கை

சென்னை ராஜதானியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் தாம மன்றோ ஒரு குறிப்பைத் தயார் செய்தார் (Minute of 10 March 1826). அக்குறிப்பில் மன்றோ மூன்று முக்கிய பரிந்துரைகளைக் கூறினார்: 1) ஒவ்வொரு **வருவாய் மா**வட்டத்திலும் (Revenue District) இரண்டு பள்ளிகளைத் துவக்க வேண்டும்; 2) அதேபோன்று, **ஒவ்வொரு தாலூக்காவிலும் ஒரு பள்ளியை ஆரம்பிக்க** வேண்டும் 3) இப்பள்ளிகளின் வளர்ச்சிக்காக அரசாங்கம் ஆண்டுதோறும் ரூ.50,000 நிதி ஒதுக்க வேண்டும். இப்படி நிதி ஒதுக்குவதன் மூலம் மக்களுக்குக் கல்வி அளிக்க **வேண்டியதன் பொறுப்பை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தினார்** மன்றோ .

மன்றோவின் கல்வித் திட்டத்தை கம்பெனி ஏற்றுக் கொண்டது (1828). ஆனால் அத்திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்துவதற்கு முன்பே தாம மன்றோ அகால மரணமடைந்தார் (1827)! மன்றோவுக்குப் பின் அவரது திட்டத்தை முன்னின்று நடத்தக் கூடியவர்கள் இன்மையால் கல்வி முற்போக்கு முயற்சி முடங்கிப் போயிற்று. கல்விக்காக ஒதுக்கப்பட்ட பணம், சரியாகச் செலவிடப்படவில்லை. துவக்கப்பட்ட **பள்ளிகள் நலிவுற்றன.** எனினும், தாம மன்றோ வகுத்துக் கொடுத்த கல்விக் கொள்கை பின்வந்தோருக்கு **முன்மாதிரியாக அமைந்தது.**

## 6.சமயப் பரப்பாளர்களின் கல்விப் பணி

### 6.1 நாணயத்தின் இரண்டு பக்கங்கள்

1498 ஆம் ஆண்டு வா கோடகாமா கள்ளிக்கோட்டைக்கு வந்ததைத் தொடர்ந்து போர்ச்சுக்கீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், டேனியர், ஆங்கிலேயர் இந்தியாவின் பல்வேறு பகுதிகளுடன் வர்த்தகத் தொடர்பு கொள்ள வந்தனர். அவர்களோடு சமயப் பரப்பாளர்களும் (Missionaries) வந்தனர். ஒரு பக்கம் வர்த்தகமும், மற்றொரு புறம் கிறித்துவ சமயப் பிரச்சாரமும் நடைபெற்றன. சமயப் **பரப்புதலுக்கான முக்கிய காரணங்க**ள் மூன்று: 1) கல்வி அறிவைக் கொடுப்பதன் மூலம் **மக்களிடையே கிறித்துவக் கருத்துக்களை எளிதில் பரப்ப முடியும்; 2) கல்வி நிறுவனங்கள்** மூலம் மக்களோடு நெருங்கித் தொடர்பு கொள்ளலாம்; 3) மக்களின் **நம்பிக்கையைப்** பெற்றபின் அவ**ர்களை மதமாற்றம் செய்யலாம். இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக** சமயப் பரப்பாளர்கள் கல்விக் கூடங்களைத் துவக்கினர்; அவற்றில் அவர்களுக்கேற்ற கல்வி முறையைப் பின்பற்றினர்; கல்வியை மதமாற்றத்துக்கான கருவியாகப் பயன்படுத்தினர்; சுருங்கக்கூறின், சமயப் பரப்பாளர்களின் கல்விப் பணியும் மதப் பிரச்சாரத் தொண்டும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவை.

### 6.2 போர்ச்சுக்கீசியர்

### முறைசாரா கல்வி

போர்ச்சுக்கீசியர்தான் இந்தியாவுக்கு வந்த முதல் சமயப் பரப்பாளர்கள். 1542 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்த புனித பிரான்சி சேவியர் (St.Francis Xavier) ரோமன் கத்தோலிக்க பிரச்சாரகர். பெயின் நாட்டில் பிறந்த இவர் ஏசு சங்கத்தின் (Society of Jesus) தோற்றகர்த்தாக்களில் ஒருவர். புனித இக்னேசிய லயோலா (St. Ignatius Layola)வின் சீடர். இறைப்பணிக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். சேவியர் **மணியை ஆட்டிக் கொண்டு கிராமம் கிராமமாகச் சென்று சமயப்** பிரச்சாரம் செய்தார். கிறித்துவ சமயத்தைப் பற்றிய சிறு புத்தகங்களை மக்களிடையே விநியோகித்தார். சேவியர் 1543 செப்டம்பர் 20 ஆம் தேதி தென் தமிழ் நாட்டுக்கு வந்து கிழக்குக் கடற்கரையில் வாழ்ந்த பரவர்களிடம் மதப் பிரச்சாரம் செய்தார். பரவர் குழந்தைகளுக்கு மூன்று மாத காலம் வினா-விடை விளக்க முறை

(Cakechizing) மூலம் கல்வி அறிவைக் கொடுத்தார். புனித சேவியர் தமிழ் நாட்டில் முதல் முறையாக **முறை**சாரா கல்வி (Non-**formal Education)யை அறிமுகப்படுத்தினார்.**

## இலவச உணவுத் திட்டம்

போர்ச்சுக்கீசியர் தமிழ் நாட்டில் பல பள்ளிகளைத் துவக்கினர். மாணவர் களுக்குப் போர்ச்சுக்கீசிய மொழியில் கல்வி கொடுக்கப்பட்டது. இப்பள்ளிகளில் கிறித்துவம், தர்க்கவாதம், இலக்கணம், இசை போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டன. கிறித்துவ மதத்தை ஆதரித்த ஏழை குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கல்வியோடு இலவச உணவும் அளிக்கப்பட்டது. போர்ச்சுக்கீசியர்கள் முதன் முதலில் கல்விக் கூடங்களில் இலவச உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர்கள். போர்ச்சுக்கீசியப் பள்ளிகளில் ஏராளமான வேறுபடுத்தப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, புறம் தள்ளப்பட்ட ஏழை மாணவர்கள் நவீன கல்வியின் பயனைப் பெற்றனர்.

### 6.3 டச்சுக்காரர்

## மேலை நாட்டுக் கல்வி

17 ஆம் நூற்றாண்டில் பிற ஐரோப்பியர்களைப் போன்றே டச்சு**க்காரர்களும்** வியாபார நோக்கத்தோடே இந்தியாவுக்கு வந்தனர். இவர்கள் தமிழ் நாட்டில் நாகப்பட்டிணத்தில் பண்டகசாலைகளைக் கட்டினர். பண்டக சாலைகளில் **பணியாற்றியோரின் பிள்ளைகளுக்காக பள்ளிகளைத்** துவக்கினர். இப்பள்ளிகளில் பிற மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். டச்சுக்காரர் சமயக் கல்வி **கொடுத்தாலு**ம், பள்ளிகளை மத மாற்றத்துக்குப் பயன்படுத்தவில்லை. டச்சுப் பள்ளிகளில் தரமான மேலை நாட்டுக் கல்வி கொடுக்கப்பட்டது.

### 6.4 டேனியர்

## அறப்பள்ளிகள்

வர்த்தக நோக்கோடு இந்தியாவுக்கு வந்த மறுப்பியக்கத்தைச் சேர்ந்த (Protestants) டேனியர் மதப் பிரச்சாரத்திலும் மத மாற்றத்திலும் தீவிரமாக ஈடுபட்டனர். எனினும் ஜெர்மனியிலிருந்து தரங்கம்பாடிக்கு வந்த சீகன்பால்க் (Ziegenbalg), பிளட்சன் (Plutchan), கிளர்நான்டர் (Kler-Nander) போன்றோர் பல அறப் பள்ளிகளை (Charity Schools)த் துவக்கினர்.

இப்பள்ளிகளில் கிறித்துவ ஆகமங்கள் தாய் மொழியிலும் ஆங்கிலத்திலும் கற்பிக்கப்பட்டன. ஆகமங்கள் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டன. தமிழ் இலக்கணம் மற்றும் சொல்லகராதி தயாரிக்கப்பட்டு, துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டுக் கொடுக்கப்பட்டது. சென்னை, கடலூர், திருச்சி, தஞ்சை போன்ற ஊர்களில் கிறித்துவப் பள்ளிகள் துவக்கப்பட்டன. இப்பள்ளிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். சிறுபான்மையினருக்கு சிறப்புப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன.

## 6.5 பிரெஞ்சுக்காரர்

பாண்டிச்சேரியிலும், காரைக்காலிலும் தங்களது வர்த்தகக் குடியிருப்புகளை அமைத்துக் கொண்ட பிரெஞ்சுக்காரர் கோத்தீ (Kothees) என்று அழைக்கப்பட்ட மையங்களில் துவக்கப் பள்ளிகளைத் துவக்கினர். இப்பள்ளிகளில் **மாணவர்கள் எவ்வித** வேறுபாடுமின்றி சேர்த்துக் கொள்ளப்பட்டனர். துவக்கப் பள்ளிகளில் தாய் மொழியிலும், **உயர்நிலைப் பள்ளிகளில் பிரெஞ்சு மொழியிலும் பாடங்கள் கற்பி**க்கப்பட்டன. அனைத்துப் பள்ளிகளிலும் கிறித்துவம் கட்டாயப் பாடமாக இருந்தது.

## 6.6 ஆங்கிலேயர்

## அறப்பள்ளிகள்

வர்த்தகத்துக்காக இந்தியாவுக்கு வந்த பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி காலப் போக்கில் அரசாங்க அமைப்பாக உருமாற்றம் அடைந்தது. கம்பெனியின் துவக்க காலத்தில் ஆங்கில வர்த்தகர்களோடு சமயப் பரப்பாளர்களும் வந்தனர். அதை பிரிட்டிஷ் அரசாங்கமும் ஊக்குவித்தது. 1698 பட்டயச் சட்டம் (Charter Act) கம்பெனியின் **பண்டகசாலைகளில்** சமயப் பரப்பாளர்களை வைத்துக் கொள்வதற்கு வழி வகுத்தது. இச்சட்டத்தின் ஒரு விதியின்படி இங்கிலாந்திலிருந்து வந்த ஒவ்வொரு வர்த்தகக் கப்பலிலும் ஒரு மதகுரு (Chaplain)வும் வந்தார். மத போதகர்கள் கம்பெனியில் பணியாற்றிய பல்வேறு சமயங்களைச் சேர்ந்தோரிடையே கிறித்துவ மதத்தைப் பற்றிக் கூறினர். இவர்கள் பல அறப் பள்ளிகளை (Charity Schools)த் துவக்கினர். 1787 இல் சென்னையில் துவக்கப்பட்ட ஒரு பெண்கள் அநாதை இல்லமும் (Female Orphan Asylum), ஆண்களுக்கான அநாதை இல்லமும் புகழ் பெற்றுத் திகழ்ந்தன. ஆண்கள் காப்பகத்தில் மத

அறிவுரை முறை (Monitorial System) அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முறையை டாக்டர் ஏ.பெல் (Dr.A.Bell) நடைமுறைப்படுத்தினார். அறப் பள்ளிகள் அனைத்தும் கிறித்துவ மதத்தைப் பரப்புவதற்காகத் தோற்றுவிக்கப்பட்டவையேயாகும். கிர் நான்டர் (Kiernander) சென்னையில் பல அறப் பள்ளிகளை ஆரம்பித்தார். சுவார்ட் (Shwartz) திருச்சியிலும், தஞ்சையிலும், ராமநாதபுரத்திலும், சிவகங்கையிலும் இத்தகைய பள்ளிகளைத் துவக்கினார்.

## 6.7 சமயப் பரப்பு சங்கங்கள்

### மூன்று கடமைகள்

18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சமயப் பரப்பாளர்கள் ஆங்கிலக் கம்பெனியின் ஆதரவை இழந்தனர். அதற்குக் காரணம் கம்பெனி வர்த்தகத்தைவிட அரசாங்க நிர்வாகத்தில் அதீத அக்கறை காட்டியதேயாகும். இதை அறிந்த வில்லியம் வில்பர்போர் (William Wilberforce), சார்ல கிராண்ட் (Charles Grant) போன்ற இங்கிலாந்தின் செல்வாக்குமிக்க அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் காலத்துக்கேற்ற சமயப் பரப்பாளர்களை இந்தியாவுக்கு அனுப்ப வேண்டும் என்று பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு நெருக்கடி கொடுத்தனர். அதன் விளைவாக 1813 பட்டயச் சட்டம் திருத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டது. இத்திருத்தம் மூன்று முக்கிய கடமைகளை அடிக்கோடிட்டுக் காட்டியது: 1) கம்பெனியின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த மக்களின் மகிழ்ச்சியை அதிகப்படுத்துவது; 2) மக்களிடையே வாழ்க்கைக்குப் பயன்படத்தக்க அறிவியல் அறிவையும், ஒழுக்க உயர்வுக்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்வது; 3) சமயப் பரப்பாளர்கள் வாழ்வியல் கல்விக்கு முக்கியத்துவம் அளிப்பது.

### புதிய அணுகுமுறை

கம்பெனியின் புதிய **அணுகுமுறையின்** மூலம் கிறித்துவ கல்வி நிறுவனங்களில் சமயம் சாரா நவீன கல்வியைக் கொடுப்பதன் மூலம் சமயப் பிரச்சாரம் செய்யப்பட்டது. இந்த நோக்கத்தோடு பல சமயப் பரப்பு சங்கங்கள் (Missionary Societies) தமிழ் நாட்டில் துவக்கப்பட்டன. சென்னை ராஜதானியில் கிறித்துவ அறிவுச் சங்கம் (Society for Christian Knowledge) துவக்கப்பட்டது. இச்சங்கம் 9 பள்ளிகளை ஆரம்பித்தது; அதேபோன்று வெலியன் மிஷன் (Wesleyan Mission) சென்னையில் இரண்டு பள்ளிகளையும், நாகையில் இரண்டு பள்ளிகளையும் ஆரம்பித்தது. 1814

லிருந்து 1823 வரை இப்பள்ளிகளில் மதப் பிரச்சாரக் கல்வி கொடுக்கப்பட்டது.

## தரமான கல்வி

**சமயப் பரப்பு சங்கங்கள் தரமான சமயம் சாரா கல்வியின் மூலம் சமயப் பிரச்சாரம்** செய்தனர். மதம் மாறுபவர்களின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்தனர்; இவற்றுக்கேற்ப இந்திய ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தனர். இச்சங்க உறுப்பினர்கள் பிராந்திய மொழிகளைக் கற்றுக் கொண்டனர். கிறித்துவ ஆகமங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. அநாதை இல்லங்களை இங்கிலாந்திலிருந்து வந்த சமயப் **பரப்பாளர்களின் துணைவியர்** கவனித்துக் கொண்டனர். இவர்கள் மு லீம் பெண்களின் வீடுகளுக்குச் சென்று பாடம் சொல்லிக் கொடுத்தனர்! இது சினானா கல்வி (Zeenana Education) என்று அழைக்கப்பட்டது. திருநெல்வேலியில் பெண்களுக்காக ஒரு உணவகப் பள்ளி (Boarding School) துவக்கப்பட்டது (1821). காட்டிஷ் தேவாலய சங்கம் (Scottish Church Society) சென்னையில் 6 பள்ளிகளை ஆரம்பித்தது. இதில் 20 இந்துப் பெண்களும் படித்தனர் (1840). லண்டன் சமயப் பரப்பு சங்கம் (London Missionary Soceity) பல இருபாலர் பள்ளிகளை (Co-**educational** Schools)த் துவக்கியது.

## 6.8 மதிப்பீடு

தமிழ் நாட்டில் சமயப் பரப்பாளர்களின் கல்வி மற்றும் பிரச்சாரப் பணிகளை நான்கு கால கட்டங்களாகப் பிரிக்கலாம்: 1) 16 ஆம் நூற்றாண்டிலிருந்து 18 ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்தோர் அவரவர் வசதி வாய்ப்புகளுக்கேற்பப் பணியாற்றினர். 2) 18 ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதி வரை கிறித்துவ விரிவாக்கப் பணி உச்சகட்டத்தை எட்டியது; 3) 19 ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியிலிருந்து 20 ஆம் நூற்றாண்டு முற்பகுதி வரை நவீன சமயம் சாராக் கல்வி முறையின் மூலம் மதத் தொண்டு மேற்கொள்ளப்பட்டது. 4) 20 ஆம் நூற்றாண்டு முற்பகுதியிலிருந்து இந்தியா விடுதலை அடையும் வரை கிறித்துவ அமைப்புகளின் நோக்கும் போக்கும் மறுபரிசீலனை செய்யப்பட்டன. அதன் விளைவாக இந்தியா சுதந்திரம் பெற்றபின் சமயம் சாராக் கொள்கையைப் பின்பற்றியது. இக்காலகட்டங்களில் எப்போதெல்லாம் மக்கள்